# அருப்புக்கோட்டை நகராட்சி

**விகாரி ஆண்டு ஆடி மாதம் நாள் : 29.07.2019 திங்கள் கிழமை மாலை 4.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் தனி அலுவலர் அறையில் நடைபெற்ற நகர்மன்ற அவசர கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை :— திரு.S.புவனேஸ்வரன் (எ) அண்ணாமலை., தனி அலுவலர்**

**பொருள் 1 :** நகராட்சி ஆணையாளர் அவர்களது ஜீலை – 2019 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும்

**அலுவலககுறிப்பு:**
பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**தீர்மானம் :**
பதிவு செய்யப்பட்டது.

**தீர்மான எண்.718**

**பொருள் 2 :** நகராட்சி பொறியாளர் அவர்களது ஜீலை – 2019 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு பதிவுக்கும்

**அலுவலககுறிப்பு:**
பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**தீர்மானம் :**
பதிவு செய்யப்பட்டது.

**தீர்மான எண்.719**

**பொருள் 3 :** இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகன எண் TN 67 AH 8624 ன் வாகனத்திற்கு தகுதிச்சான்று முடிவடைவதால் மேற்படி வாகனத்தின் பழுதுபணிகள் பார்த்து தகுதிச்சான்று பெற்றுத்தர விலைப்புள்ளி கோரியதில் அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனை நிறுவனங்களான கீழ்காணும் பணிமனை நிறுவனங்களிடமிருந்து கீழ்க்காணும் விபரப்படியான விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. மேற்படி விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும்.

| வ.எண். | அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனை நிறுவனத்தின் பெயர் விபரம் | மேற்படி வாகனத்தின் பழுது பணிகள் பார்த்து தகுதிச்சான்று பெற்றுத்தர ஆகும் செலவீனத்திற்கான விலைப்புள்ளி விபரம் ரூ. |
|---|---|---|
| 1. | ASR Body Works (Workshop approved by Govt.of Tamilnadu) Plot.No.17, உதயம் நகர் மெயின் ரோடு, கோவில்பாப்பாகுடி, மதுரை—18 | 74,819/- |
| 2. | சத்குரு மோட்டார்ஸ், (Workshop approved by Govt.of Tamilnadu)) Plot.No.56, பிரியங்கா நகர், கோவில்பாப்பாகுடி, மதுரை —18 | 80,750/- |

மேற்படி இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழஙகியுள்ள தமிழ்நாடு அரசு அங்கீகாரம் பெற்ற, ASR Body Works, கோவில்பாப்பாகுடி, மதுரை நிறுவனத்திற்கு வேலை உத்தரவினை வழஙகிடலாம். மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**
மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.127/2019/எச்2

**தீர்மானம் :**
அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.720**

**பொருள் 4 :** அருப்புக்கோட்டை நகராட்சி பொது சுகாதாரம் வறுமைகோட்டிற்கு கீழ் வாழும் மக்களை கணக்கெடுப்பு படிவம் இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய ஆகும் உத்தேச செலவினத் தொகைக்கு உள்ளூர் நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விபரம் கீழ்கண்டவாறு

1. ஜேம்ஸ் தனபால் திருநகரம், அருப்புக்கோட்டை – ரூ.1,17,600/–
2. உதயக்குமார் வெள்ளைக்கோட்டை அருப்புக்கோட்டை – ரூ.1,27,400/–

வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்த ஜேம்ஸ் தனபால் திருநகரம், அருப்புக்கோட்டை நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதி வழஙகலாம்.

ந.க.எண்.12357/2019/எச்1

**தீர்மானம் :**

அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.721**

**பொருள் 5 :** விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை நகராட்சி அருப்புக்கோட்டை நகரம் வார்டு:D, பிளாக் 14, டி.எஸ்.எண் 6,5,28 பார்ட் & 29 பார்ட் எஸ்.பி.கே.மேல்நிலைப்பள்ளி ரோடு க.எண்.17–19–21/2 & 20.11.100 இடத்தில் 31.03.2019 முதல் 21.04.2019 வரை 22 நாட்களுக்கு எஸ்.பி.கே.37வது பொருட்காட்சி நடத்துவதை ரத்து செய்யக்கோரி திரு.S.சஙகரன்த/பெ.P.S.சிவசஙகரன் 30, காரியம் வெள்ளையன் தெரு, அருப்புக்கோட்டை என்பவர் சென்னை உயர்நீதி மன்றம் மதுரை பெஞ்ச் கிளையில் W.P.(MD) No.7728/2019 ல் வழக்கு தொடர்ந்துள்ளார். மேலும் வழக்கு தொடர்பாக ஆணையாளர் அருப்புக்கோட்டை நகராட்சி அவர்களை 4ம் பிரதிவாதியாக சேர்த்து வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கிற்கு நகராட்சி சார்பாக உயர்நீதி மன்றத்தில் திரு.N.திலீப்குமார் ஆஜராகுவதற்கும் மற்றும் உத்தேச வழக்கு கட்டணத்திற்கான உத்தேச செலவிற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.517/2019/எப்1

**தீர்மானம் :**

அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.722**

**பொருள் 6 :** அருப்புக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான திருப்புவனம் தலைமை நீரேற்றும் நிலையம் அருகில் உள்ள அஙகாடி மஙகலம் நீரேற்றும் நிலையத்தில் EB சர்வீஸ்வயர்கள் மற்றும் உட்புற வயரிங வயர்கள் புதியதாக புதுப்பிக்கும் பணிகள் மேற்கொள்ளவும், அதற்குரிய செலவுத்தொகை மதிப்பீடு ரூ.1.20யை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.3889/2019/இ1

**தீர்மானம் :**

அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.723**

**பொருள் 7 :** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 13, கதவு எண் 28க்கு மறு அளவீடு படி உயர்த்தப்பட்ட சொத்துவரியினை எதிர்த்து திரு.புகழேந்தி என்பவரால் இந்நகராட்சி ஆணையாளரை பிரதிவாதியாக சேர்த்து முதன்மை மாவட்ட உரிமையில் நீதிமன்றம் அருப்புக்கோட்டை வழக்கு எண் O.S.No.162/2019 மூலம் வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேற்படி இந்நகராட்சி சார்பாக திரு.D.சஙகரன், வழக்கறிஞர் ஆஜராகி வழக்கு நடத்தவும், மேலும் வழக்கிற்கு ஆகும் உத்தேச செலவுத்தொகைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**
மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.5178/2019/அ2

**தீர்மானம் :**
அனுமதிக்கப்பட்டது.
**தீர்மான எண்.724**

**பொருள் 8 :** அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு F, பிளாக் 3, நகரளவு எண் 8/1சி1ல் 0.94(3804.04சமீ) பரப்பளவில் அமைந்திருந்த அனுதியற்ற மனைப்பிரிவை அரசாணை எண் 78,172, H&UD நாள்.04.05.2017 மற்றும் 13.10.2017ன் படி வரன்முறைபடுத்த கோரி திருமதி.H.ஹவ்வாமரியம் என்பவர் விண்ணபித்ததன் பேரில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மதுரை அவர்களால் ம.வ.(மு)/ந.ஊ.து.இ(மம) எண் 170/2019 நாள் 21.02.2019ல் கொள்கை அளவிலான ஒப்புதல் வழஙகப்பட்டுள்ளது. மேற்படி ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட பூஙகா மற்றும் சாலை இடத்தினை ஆவண எண் 2221/2019 நாள் 09.05.2019 ல் மனுதாரரால் நகராட்சிக்கு தானமாக வழஙகப்பட்டுள்ளது. மேற்படி பூஙகா மற்றும் சாலை இடத்தினை நகராட்சி ஏற்று அசையாச் சொத்து பதிவேட்டில் பதிவு செய்யலாம்

**அலுவலக குறிப்பு**
மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.1342/2019/எப்1
**தீர்மானம் :**
அனுமதிக்கப்பட்டது.
**தீர்மான எண்.725**

**பொருள் 9 :** அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு F, பிளாக் 1, நகரளவு எண் 15/4A பகுதியில் 2.16 ஏக்கர் (8741.20சமீ) பரப்பளவில் அமைந்திருந்த அனுமதியற்ற மனைப்பிரிவை அரசாணை எண் 78, 172, H &UD நாள் 04.05.2017 மற்றும் 13.10.2017 ன்படி வரன்முறைப்படுத்த கோரி திரு.P.சுப்புராஜ் என்பவர் விண்ணபித்ததன் பேரில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மதுரை அவர்களால் ம.வ.(மு)/ந.ஊ.து.இ(மம)எண் 210/2019 நாள் 19.03.2019ல் கொள்கை அளவிலான ஒப்புதல் வழஙகப்பட்டுள்ளது. மேற்படி ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட பூஙகா மற்றும் சாலை இடத்தினை ஆவண எண் 2516/2019 நாள் 28.05.2019ல் மனுதாரரால் நகராட்சிக்கு தானமாக வழஙகப்பட்டுள்ளது. மேற்படி பூஙகா மற்றும் சாலை இடத்தினை நகராட்சி ஏற்று அசையாச் சொத்து பதிவேட்டில் பதிவு செய்யலாம்.

**அலுவலக குறிப்பு**
மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.3075/2019/எப்1
**தீர்மானம் :**
அனுமதிக்கப்பட்டது.
**தீர்மான எண்.726**

**பொருள் 10 :** இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவுக்கு நகர்பகுதிகளில் டெஙகு காய்ச்சல் பரவா வண்ணம் தடுக்க கொசுப்புழு ஒழிப்பு பணிக்கு கிருமிநாசினியாகப் பயன்படுத்தப்படும் பிளிச்சிங பவுடர் 2 டன் தேவைப்படுவதால் மேற்படி 2டன் பிளிச்சிங பவுடர் வாஙகிடவும், அதற்கான உத்தேச செலவு ரூ.80,000/— வரை செலவு செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**
மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.3869/2019/எச்2
**தீர்மானம் :**
அனுமதிக்கப்பட்டது.
**தீர்மான எண்.727**

**பொருள் 11 :** அருப்புக்கோட்டை நகராட்சி பகுதிகளில் வீடுகளிலிருந்து சேகரிக்கப்படும் முதல்நிலை குப்பைகளை நகர் பகுதிகளுக்குள்ளேயே வைத்து உரமாக்கும் பணிக்கு 5MCC மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேற்படி 5 MCC மையங்களில் குப்பைகளை மக்கச்செய்வதற்கு EM.Solution எனப்படும் EM-1 "Enviro pro solution" (நுண்ணுயிர் ஊக்கக்கலவை) அவசியம் தேவைப்படுவதால் முதற்கட்டமாக 200 லிட்டர் கொள்முதல் செய்ய அனுமதியும் அதற்கான உத்தேச செலவுத்தொகை ரூ.2,00,000/–வரை செலவு செய்யவும், மேற்படி நுண்ணுயிர் ஊக்கக்கலவையினை அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு நிறுவனமான மல்டிபர்பஸ் இண்ட்கோ சர்வ், திருச்சி நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.3861/2019/எச்2

**தீர்மானம் :**

அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.728**

**பொருள் 12 :** அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட 1 முதல் 36 வார்டுகளில் உள்ள தெருவிளக்கு பராமரிப்பு பணிகளை தனியார் நிறுவனம் மூலம் மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண் 1400, நாள் 29.07.2013ல் நிர்வாக அனுமதி வழஙகப்பட்டது. அதன் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஸ்ரீசுதர்சனா இன்ஜினியரிங ஒர்க்ஸ் நிறுவனம் வழஙகிய குறைந்த ஒப்பந்தப்புள்ளியானது ஏற்கப்பட்டு இந்நகர்மன்ற தீர்மான எண் 2275 நாள் 28.08.2018ன்படி 01.10.2015 முதல் 30.09.2018 வரை தெருவிளக்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள உத்தரவு வழஙகப்பட்டது. தற்பொழுது மேற்படி நிறுவனத்தாருக்கு வழஙகப்பட்ட பராமரிப்பு காலம் 30.09.2018 உடன் முடிவடைகிறது.

மேலும் அரசாணை எண் 39 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை (ந.நி–IV) நாள் 21.04.2017ன் படி, நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.35871/2014/இ1 நாள்27.04.2017ல் தெரிவித்துள்ளவாறு இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அனைத்து விளக்குகளையும் Energy Saving Lamps (LED Lights) and Engergy saving measureing அமைக்க மின்சேமிப்பு கணக்கீட்டு முகவர்கள் (Investment Grade Audit Agency) நியமனம் செய்யப்பட்டு திட்ட அறிக்கை தயார் செய்யும் பணி நடைபெற்றுவருகிறது. மேற்படி திட்டமானது விரைவில் நடைமுறை படுத்தப்பட உள்ளது. மேற்கண்டவாறு தெருவிளக்கு பராமரிப்பு பணிகளை மேலும் 3 ஆண்டுகளுக்கு தனியார் நிறுவனம் மூலம் மேற்கொள்ள வழிவகை இல்லாத சூழ்நிலையில் தெருவிளக்கு பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டிய அவசர அவசியம் கருதி இவ்வலுவலக தீர்மான எண் 525 நாள் 08.10.2018 ன்படி அதே விலைவிகிதத்திலேயே ஸ்ரீசுதர்சனா இன்ஜினியரிங ஒர்க்ஸ் நிறுவனத்திற்கு 08.10.2018 முதல் 31.12.2018 வரை மூன்று மாதஙகளுக்கும், மேலும் இவ்வலுவலக தீர்மான எண் 578 நாள் 11.12.2018 ன்படி 01.01.2019 முதல் 30.06.2019 வரை ஆறு மாதஙகளுக்கு பணிகளை மேற்கொள்ள காலநீடிப்பு செய்து வேலைஉத்தரவு வழஙகப்பட்டு பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

தற்சமயம் மேற்கண்டவாறு காலநீட்டிப்பு செய்யப்பட்டு ஆறு மாதஙகள் ஜீன் மாதத்தோடு முடிவடையஉள்ளதால் தெருவிளக்கு பணியின் அவசர அவசியம் கருதி ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட அதே விலை விகிதத்திலேயே மேலும் ஆறு மாதஙகளுக்கு தொடர்ந்து தெருவிளக்கு பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள மேற்படி ஸ்ரீசுதர்சனா இன்ஜினியரிங ஒர்க்ஸ் நிறுவனம் சம்மதம் தெரிவித்து கடிதம் வழஙகியதன் அடிப்படையில் 01.07.2019 முதல் மேலும் ஆறு மாதஙகளுக்கு கால நீட்டிப்பு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் ஒப்புதல் வழஙகலாம்.
2. தெருவிளக்கு பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழஙகியதையும் மன்றம் அஙகீகரிக்கலாம்.

ந.க.எண்.6380/2013/இ2

**தீர்மானம் :**

அலுவலகக்குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.729**

**பொருள் 13 :** அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 3 மேட்டுத்தெருவில் சிமெண்ட் சாலை மழையினால் மிகவும் சேதமடைந்து பொதுமக்கள் மற்றும் வாகனஙகள் செல்வதற்கு இடையூறாக இருப்பதால் மேற்கண்ட சாலையில் புதியதாக மழைநீர் வடிகாலுடன் கூடிய பேவர் பிளாக் தளம் அமைக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ.17.00 இலட்சத்துக்கு இந்நகர்மன்றத் தீர்மான எண்.690, நாள்.31.05.2019ல் நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

அதன்பேரில் மேற்கண்ட பணிக்கு 02.07.2019 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தகாரார் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | திரு.D.சிவகுமார் அருப்புக்கோட்டை | 8.26 % மதிப்பீட்டு தொகையை விட குறைவாக |
| 2. | திரு.M.N.எர்ஷாத்கான் அருப்புக்கோட்டை | 4.64 % மதிப்பீட்டு தொகையை விட அதிகமாக |
| 3. | திருமதி.M.N.காத்தூன்பீவி அருப்புக்கோட்டை | 20.70 % மதிப்பீட்டு தொகையை விட அதிகமாக |

**அலுவலகக் குறிப்பு :–**

வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலையை விட 8.26% குறைவாக கொடுத்துள்ள திரு.D.சிவகுமார், ஒப்பந்ததாரர் அருப்புக்கோட்டை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ளலாம்.

ந.க.எண்.3591/2019/இ1

**தீர்மானம் :**

அலுவலகக்குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.730**

**பொருள் 14 :** அருப்புக்கோட்டை நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் திருச்சுழி சாலையில் உள்ள சொக்கநாதசுவாமி திருக்கோவிலின் முன்புறம் உள்ள வாறுகால் மூடி உடைந்துள்ளதை சரிசெய்ய உத்தேச மதிப்பீடு ரூ.0.50 இலட்சத்துக்கு இந்நகர்மன்றத் தீர்மான எண்.691, நாள்.31.05.2019ல் நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

அதன்பேரில் மேற்கண்ட பணிக்கு 02.07.2019 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தகாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | திருமதி.R.பஞ்சவர்ணம் அருப்புக்கோட்டை | 0.09 % மதிப்பீட்டு தொகையை விட குறைவாக |
| 2. | திரு.M.N.எர்ஷாத்கான் அருப்புக்கோட்டை | 4.49 % மதிப்பீட்டு தொகையை விட அதிகமாக |

**அலுவலகக் குறிப்பு :–**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலையை விட 0.09% குறைவாக கொடுத்துள்ள திரு.R.பஞ்சவர்ணம், ஒப்பந்ததாரர் அருப்புக்கோட்டை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ளலாம்.

ந.க.எண்.2040/2019/இ1

**தீர்மானம் :**

அலுவலகக்குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.731**

**பொருள் 15 :** அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட சுக்கிலநத்தம் சாலையில் உள்ள துப்புரவு பணியாளர் குடியிருப்பில் தரைத்தளத்தில் உள்ள வீடுகளில் Tilesகள் உடைந்து மிகவும் சேதமடைந்துள்ளதால் அதனை சீரமைக்கும் பணிக்கான உத்தேச மதிப்பீடு ரூ.1.00 இலட்சத்துக்கு இந்நகர்மன்றத் தீர்மான எண்.679, நாள்.31.05.2019ல் நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

அதன்பேரில் மேற்கண்ட பணிக்கு 02.07.2019 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தகாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | திருமதி.R.பஞ்சவர்ணம் அருப்புக்கோட்டை | 0.02 % மதிப்பீட்டு தொகையை விட குறைவாக |
| 2. | திரு.M.N.எர்ஷாத்கான் அருப்புக்கோட்டை | 0.37 % மதிப்பீட்டு தொகையை விட அதிகமாக |

**அலுவலகக் குறிப்பு :–**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலையை விட 0.02% குறைவாக கொடுத்துள்ள திரு.R.பஞ்சவர்ணம், ஒப்பந்ததாரர் அருப்புக்கோட்டை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ளலாம்.

ந.க.எண்.3428/2019/இ1

**தீர்மானம் :**

அலுவலகக்குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.732**

**பொருள் 16 :** அருப்புக்கோட்டை நகராட்சிக்கு உட்பட்ட 36 வார்டு பகுதிகளிலும் அடிக்கடி ஏற்படும் பகிர்மான குழாய்கள், வால்வுகள் மற்றும் வைகை குடிநீர் குழாய்கள் ஆகியவற்றில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரிசெய்வதற்கு உத்தேச மதிப்பீடு ரூ.7.00 இலட்சத்துக்கு இந்நகர்மன்றத் தீர்மான எண்.685, நாள்.31.05.2019ல் நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

அதன்பேரில் மேற்கண்ட பணிக்கு 02.07.2019 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தகாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | திருமதி.M.N.காத்தூன்பீவி அருப்புக்கோட்டை | 0.76 % மதிப்பீட்டு தொகையை விட அதிகமாக |
| 2. | திரு.M.N.எர்ஷாத்கான் அருப்புக்கோட்டை | 0.08 % மதிப்பீட்டு தொகையை விட குறைவாக |

**அலுவலகக் குறிப்பு :—**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலையை விட 0.08% குறைவாக கொடுத்துள்ள திரு.M.N.எர்ஷாத்கான், ஒப்பந்ததாரர் அருப்புக்கோட்டை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ளலாம்.

ந.க.எண்.3587/2019/இ1

**தீர்மானம் :**

அலுவலகக்குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.733**

**பொருள் 17 :** அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 4 அன்புநகர் 10வது தெருவில் பகுதிதெருவிற்கு மட்டுமே பைப்லைன் பதிக்கப்பட்டுள்ளதால் மீதமுள்ள பகுதிக்கு சாலை அமைப்பதற்கு முன்பாக பகிர்மானக் குழாய் அமைக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ.0.23 இலட்சத்துக்கு இந்நகர்மன்றத் தீர்மான எண்.689, நாள்.31.05.2019ல் நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

அதன்பேரில் மேற்கண்ட பணிக்கு 02.07.2019 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தகாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | திருமதி.M.N.காத்தூன்பீவி அருப்புக்கோட்டை | 2.90 % மதிப்பீட்டு தொகையை விட அதிகமாக |
| 2. | திரு.M.N.எர்ஷாத்கான் அருப்புக்கோட்டை | 0.22 % மதிப்பீட்டு தொகையை விட குறைவாக |

**அலுவலகக் குறிப்பு :—**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலையை விட 0.22% குறைவாக கொடுத்துள்ள திரு.M.N.எர்ஷாத்கான், ஒப்பந்ததாரர் அருப்புக்கோட்டை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ளலாம்.

ந.க.எண்.3641/2019/இ1

**தீர்மானம் :**

அலுவலகக்குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.734**

**பொருள் 18 :** அருப்புக்கோட்டை நகராட்சிக்கு உட்பட்ட சுக்கிலநத்தம் உரக்கிடங்கில் Processing unit machineries பொருத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட machineries இயக்கத்திற்கு கொண்டுவருவதற்கு மின்இணைப்பு பெறுவதற்கு LT/CT meter box மற்றும் wiring work மேற்கொள்ள வேண்டி உள்ளது. மேற்கண்ட பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்துக்கு இந்நகர்மன்றத் தீர்மான எண்.684, நாள்.31.05.2019ல் நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

அதன்பேரில் மேற்கண்ட பணிக்கு 02.07.2019 அன்று ஒப்பந்துபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தகாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | திரு.M.அஸ்ரப் அலி அருப்புக்கோட்டை | 3.25 % மதிப்பீட்டு தொகையை விட அதிகமாக |
| 2. | திரு.R.சுந்தர்ராஜ் விருதுநகர் | 0.08 % மதிப்பீட்டு தொகையை விட குறைவாக |

**அலுவலகக் குறிப்பு :–**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலையை விட 0.08% குறைவாக கொடுத்துள்ள திரு.R.சுந்தர்ராஜ், ஒப்பந்ததாரா் விருதுநகர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ளலாம்.

ந.க.எண்.3588/2019/இ1

**தீர்மானம் :**

அலுவலகக்குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.735**

**பொருள் 19 :** அருப்புக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் லாரி எண் TN67 B 8965 வாகனம் பழுதடைந்துள்ளதை சரிசெய்யும் பணிக்கு உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.1.25 இலட்சத்துக்கு இந்நகர்மன்றத் தீர்மான எண்.688, நாள். 31.05.2019ல் நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

அதன்பேரில் மேற்கண்ட பணிக்கு 02.07.2019 அன்று ஒப்பந்துபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தகாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1. | ஸ்ரீ பாலமுருகன் ஆட்டோமொபைல்ஸ் அருப்புக்கோட்டை | ரூ.1,28,500/– |
| 2. | ஸ்ரீ மனோஜ்குமார் ஆட்டோமொபைல்ஸ் அருப்புக்கோட்டை | ரூ.1,24,900/– |

**அலுவலகக் குறிப்பு :–**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு தொகையைவிட குறைவாக கொடுத்துள்ள ஸ்ரீ மனோஜ்குமார் ஆட்டோமொபைல்ஸ் அருப்புக்கோட்டை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ளலாம்.

மேலும் குடிநீர் பணியின் அவசர அவசியத்தை கருதி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழஙகியதையும் மன்றம் அஙகீகரிக்கலாம்.

ந.க.எண்.3590/2019/இ2

**தீர்மானம் :**

அலுவலகக்குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.736**

**பொருள் 20 :** அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 14 பத்திரம் சவுண்டு தெரு கதவு எண் 8க்கு பொது சீராய்வின் படி உயர்த்தப்பட்ட சொத்துவரியினை எதிர்த்து இந்நகராட்சி ஆணையாளரை பிரதிவாதியாக சேர்த்து அருப்புக்கோட்டை சார்பு நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண் 145/2019, வழக்கிற்கு திரு.D.சஙகரன் வழக்கறிஞர் ஆஜராகுவதற்கும் அதற்காகும் செலவினத் தொகைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிவழஙகலாம்.

ந.க.எண்.4638/2019/அ2

**தீர்மானம் :**

அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.737**

**பொருள் 21 :** நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்கள் 02.07.2019ம் தேதிய ந.க.எண்.2348/17–ஆ2 கடிதத்தின்படி இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்தாத கட்டிடஙகளில் புதிதாக கட்டமைப்பு ஏற்படுத்தவும், பழுதடைந்த நிலையில் உள்ள கட்டமைப்புகளை சீர்செய்யவும் கட்டிட உரிமையாளருக்கு அறிவிப்பு வழஙகுவதற்கு 15000 அறிவிப்புகளும், ஏற்கனவே மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு உள்ள கட்டிடஙகளில் விளம்பர ஸ்டிக்கர் ஒட்ட 10000 எண்ணமும் திருச்சி தமிழ்நாடு மல்டிபர்பஸ் இண்ட்கோ சர்வ் நிறுவனம் மூலம் அச்சடிக்கவும் அதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ.180000/– மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம், அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழஙகியதையும் மன்றம் அஙகீகரிக்கலாம்.

ந.க.எண்.4438/2019/எப்1

**தீர்மானம் :**

அலுவலகக்குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.738**

**பொருள் 22 :** அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 35, வ.வி.எண்.28596க்கு பொது சீராய்வின் படி உயர்த்தப்பட்ட சொத்துவரியினை எதிர்த்து இந்நகராட்சி ஆணையாளரை பிரதிவாதியாக சேர்த்து அருப்புக்கோட்டை முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் திரு.ஆறுமுகம் என்பவரால் தொடரப்பட்ட வழக்கு எண் 147/2019 வழக்கிற்கு திரு.D.சஙகரன், வழக்கறிஞர் ஆஜராவதற்கும், அதற்காகும் உத்தேச செலவினத் தொகைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.4717/2019/அ2

**தீர்மானம் :**

அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.739**

**பொருள் 23 :** அருப்புக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான TN 67 A7339 குடிநீர் லீக் வாகனத்தின் தகுதிச்சான்று 20.08.2019 தேதியுடன் முடிவடைகிறது. எனவே மேற்கண்ட வாகனத்திற்கு FC பெறுவதற்கு வாகனத்தில் உள்ள பழுது பணிகள் பார்ப்பதற்கு உத்தேச மதிப்பீடு ரூ.42000/– ஆகும். மேற்கண்ட பணியை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.4658/2019/இ2

**தீர்மானம் :**

அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.740**

**பொருள் 24 :** அருப்புக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான அம்மா உணவகத்தில் பால் மற்றும் இட்லி மாவுகள் வைக்கும் Freezer ல் உள்ள Compressor பழுதாகி உள்ளதால் அதனை சரிசெய்ய உத்தேச மதிப்பீடு ரூ.12000/—யை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.4626/2019/இ1

**தீர்மானம் :**

அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.741**

**பொருள் 25 :** அருப்புக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான அலுவலக நீர்தேக்க தொட்டியில் இருந்து பம்பிங மூலம் மதுரை ரோடு மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு 25HP மின்மோட்டார் மூலம் குடிநீர் ஏற்றப்படுகிறது. மேற்கண்ட 25HP மின்மோட்டாரில் உள்ள Non Return Valve பழுதாகிஉள்ளதை சரிசெய்யும் பணிக்கு மதிப்பீடு ரூ.35000/—யை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.4412/2019/இ1

**தீர்மானம் :**

அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.742**

**பொருள் 26 :** அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட நகராட்சி அலுவலக வளாகம் மதுரை ரோடு நீர்தேக்கத்தொட்டி வளாகம், கட்டஙகுடி Booster Station ஆகிய இடஙகளில் மழை நீரை சேமிக்க Rain Water Harvesting ஏற்படுத்துவதற்கு உத்தேச மதிப்பீடு ரூ.70000/— ஆகும். மேற்கண்ட பணியை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.4490/2019/இ1

**தீர்மானம் :**

அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.743**

**பொருள் 27 :** அருப்புக்கோட்டை நகராட்சி திருப்புவனம் தலைமை நீரேற்றும் நிலையம் அருகில் வைகையாற்றில் நகராட்சிக்கு சொந்தமான திறந்தவெளி கிணறு துார்வாரப்படாமல் உள்ளதால் பயன்பாடு இல்லாமல் இருந்துவருகிறது. தற்போது மேற்படி கிணற்றின் கீழ்பகுதியில் சுமார் 400 மீட்டர் தொலைவில் வைகையாற்றின் குறுக்கே புதியதாக தடுப்பனை பொதுப்பணிதுறையினால் கட்டப்பட்டு பயன்பாட்டிற்கு வந்துள்ளது. இதன் காரணமாக வைகையாற்றில் நீர்வரத்து வரும்போது மேற்படி கிணற்றில் தண்ணீர் தேஙகி நீர் ஊற்றுகள் கிடைக்கப்பெற வாய்ப்புகள் உள்ளது. எனவே தற்போது கிணற்றினை மராமத்து பணி மேற்கொண்டு புதியதாக மோட்டார் பம்பு செட் மற்றும் அதற்குறிய பைப்லையன் அமைப்பதற்கும், மோட்டாரை பொருத்தி இயக்கத்திற்கு கொண்டு வருவதற்கு ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.5.50 இலட்சத்தினை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.4490/2019/இ1

**தீர்மானம் :**

அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.744**

**பொருள் 28 :** அருப்புக்கோட்டை நகராட்சியில் பயன்படுத்தப்பட்டுவரும் பழைய கணினிகள் 20 எண்ணம், UPSகள் 4 எண்ணம், லேசர் பிரிண்டர்கள் 5எண்ணம், டாட்மெட்ரிக் பிரிண்டர்கள் 5 எண்ணம் மற்றும் ஜெராக்ஸ் மிசின்கள் 2 எண்ணம் ஆகியவைகளின் ஆண்டு பராமரிப்புக்காலம் 31.07.2019 உடன் முடிவடைகிறது. எனவே அலுவலக பணிகள் ஏதும் தடைபடாமல் தொடர்ந்து இயங்க மேற்படி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடமிருந்து ஒப்பந்தம் செய்துகொள்ள ஓர் ஆண்டுக்கான பராமரிப்பு செய்வதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.2.00 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.5188/2019/இ1

**தீர்மானம் :**

அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.745**

**பொருள் 29 :** அருப்புக்கோட்டை நகராட்சியில் அனைத்து பிரிவுகளும் கணினி மையமாக்கப்பட்டு UTIS மென்பொருள்கள் மூலம் செய்படுத்தப்பட்டுவருகிறது. UTIS –Phase -1 செயலாக்கம் நடைமுறையில் உள்ள நிலையில் தற்போது UTIS – Phase -2 செயலாக்கம் செய்ய நகராட்சிகளின் நிர்வாக ஆணையர் அவர்கள், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி தற்போது Phase-2 செயலாக்கம் செய்ய Latest Configuration ன்படி புதிய கணினிகள் 10 (பத்து) எண்ணம் மற்றும் பொது பிரிவுக்கு High End Laser Prinder அல்லது ஒரு ஜெராக்ஸ் மிசின் வாங்கும் பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ.10.00 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.5189/2019/இ1

**தீர்மானம் :**

அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.746**

**பொருள் 30 :** அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட நகராட்சி பள்ளிகளில் தனியார் மயம் மூலம் துப்புரவு பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.32050/2016/ஜே2 நாள் 26.10.2017ல்அனுமதி வழஙகப்பட்டுள்ளது. அதன்படி 20.04.2018 அன்று மேற்படி தனியார்மயம் மூலம் பள்ளிகளில் துப்புரவு பணிகள் மேற்கொள்ள அருப்புக்கோட்டை நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர்(பொ) அவர்களின் 10.07.2018 ம் தேதியில் செயல்முறைகளில் 16.07.2018 முதல் 15.07.2019 முடிய ஒரு வருட காலத்திற்கு உத்தரவு வழஙகப்பட்டுள்ளது. மேலும் தனியார் மயம் துப்புரவு பணிகள் மேற்கொண்டதற்கு ஒரு வருட காலம் முடிவடையும் தருவாயில் உள்ளதால் மீண்டும் ஏற்கனவே பார்த்துவந்த M/S.Malar clean and Green Pvt Ltd, Sankarankovil நிறுவனம் ஒரு வருட காலம் பழைய ஒப்பந்தப்புள்ளி விலை விகிததிலேயே மீண்டும் ஒரு வருட காலம் பழைய ஒப்பந்த புள்ளி விலைவிகிதத்திற்கே பார்த்துவர விருப்பம் தெரிவித்துள்ளதாலும் மேற்படி நிறுவனம் நல்ல முறையில் பணி செய்து வருவதாக தலைமை ஆசிரியர்கள், துப்புரவு ஆய்வாளர்கள் மற்றும் நகர்நல அலுவலரால் நீட்டிப்பு செய்ய சிபாரிசு செய்யப்பட்டுள்ளதாலும் பொது சுகாதார அவசர அவசியம் கருதியும் அதே நிறுவனத்திற்கு நகராட்சி பள்ளிகளில் தனியார் துப்புரவு பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான செலவுத் தொகைக்கும் மன்றத்தின் அனுமதிவேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.9624/2017/எச்1

**தீர்மானம் :**

அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.747**

**பொருள் 31 :** அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தனியார் மயம் மூலம் துப்புரவு பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.27973/2017/ஜே3 நாள் 20.12.2017ல்அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 20.04.2018 அன்று மேற்படி தனியார்மயம் மூலம் நகர் பகுதிகளில் துப்புரவு பணிகள் மேற்கொள்ள அருப்புக்கோட்டை நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர்(பொ) அவர்களின் 10.07.2018 ம் தேதியில் செயல்முறைகளில் 16.07.2018 முதல் 15.07.2019 முடிய ஒரு வருட காலத்திற்கு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேலும் தனியார் மயம் துப்புரவு பணிகள் மேற்கொண்டதற்கு ஒரு வருட காலம் முடிவடையும் தருவாயில் உள்ளதால் மீண்டும் ஏற்கனவே பார்த்துவந்த M/S.Malar clean and Green Pvt Ltd, Sankarankovil நிறுவனம் ஒரு வருட காலம் பழைய ஒப்பந்தப்புள்ளி விலை விகிதததிலேயே மீண்டும் பார்த்துவர விருப்பம் தெரிவித்துள்ளதாலும் மேற்படி நிறுவனம் நல்ல முறையில் பணி செய்து வருவதாக துப்புரவு ஆய்வாளர்கள மற்றும் நகர் நல அலுவலரால் நீட்டிப்பு செய்ய சிபாரிசு செய்யப்பட்டுள்ளதாலும் பொது சுகாதார அவசர அவசியம் கருதியும் அதே நிறுவனத்திற்கு தனியார் துப்புரவு பணிகள் மேற்கொள்ளவும் வழஙகவும் அதற்கான செலவுத் தொகைக்கும் மன்றத்தின் அனுமதிவேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் அனுமதி வழஙகலாம்.

ந.க.எண்.11734/2015/எச்1

**தீர்மானம் :**

அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.748**

**பொருள் 32 :** சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2012—13ன் கீழ் அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட திருச்சுழிரோடு பாலிடெக்னிக் வாசலில் உள்ள பஸ்நிறுத்தம் கட்டும் பணிக்கு பாதை உரிமையை மறைத்து கட்டப்பட்டுள்ளதாக ஆட்சேபனை தெரிவித்து தொடரப்பட்ட வழக்கு எண் O.S.No.276/2013 க்கு தீர்ப்பு 18.08.2018 அன்று முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, அருப்புக்கோட்டை அவர்களால் வழஙகப்பட்டுள்ளது. அதன்படி மேற்கண்ட தாவா சொத்தில் கட்டுமானம் ஏதும் ஏற்படுத்தக் கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை வழஙகியும், வாதிகள் கோரியுள்ளபடி கட்டுமானத்தை அப்புறப்படத்திட 3 மாதம் என செயலுறுத்துக்கட்டளை பரிகாரமும் வழஙகி அசல் வழக்கானது முற்றிலுமாக அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே நீதிமன்ற உத்தரவுப்படி மேற்கண்ட கட்டுமானத்தை அப்புறப்படுத்தவும் அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.13000/—யை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.4162/2012/இ1

**தீர்மானம் :**

அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.749**

**பொருள் 33 :** அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட 36 வார்டுகளில் அமைக்கப்பட்டுள்ள 735 அடிகுழாய்களுக்கு பராமரிப்பு பணி செய்ய உதிரிபாகஙகள் Mouth, Cylinder, Head set ஆகிய பொருட்களை TANSI TOOLS & ENGG. WORKS நிறுவனம் மூலம் விநியோகம் செய்ய ரூ.4,79,416/—க்கு விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது. தற்போது உள்ள வறட்சியினை கருத்தில் கொண்டு உடனடியாக மேற்கண்ட உதிரிபாகஙகள் வாஙகும் பணியை குடிநீர் வடிகால் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.3259/2018/இ1

**தீர்மானம் :**

அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.750**

**பொருள் 34 :** அருப்புக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலைய இரு சக்கர வாகன காப்பகத்திற்கு 31.05.2018, 28.06.2018, 31.07.2018, 30.08.2018, 28.09.2018, 26.10.2018, 20.11.2018, 27.12.2018, 22.01.2019, 19.02.2019, 28.02.2019, 21.03.2019 மற்றும் 14.06.2019 ஆகிய நாட்களில் ஏலம்/ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டும் ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி கோர எவரும் முன்வரவில்லை. மேற்படி இனத்திற்கு 10.07.2019 அன்று மறு ஏலம்/ ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் ஏலம் கோர எவரும் முன்வரவில்லை. திரு.இன்பசேகரன் என்பவர் மட்டும் ரூ.303000/—க்கு ஒப்பந்தபுள்ளி வழஙகியுள்ளார்.

மேற்படி இருசக்கர வாகன காப்பகம் கட்டண வசூல் 28.01.2019 முதல் துறை மூலம் இந்நகராட்சியில் பணிபுரியும் 4 பணியாளர்களை கொண்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது. துறை மூலம் வசூல் செய்வதில் நாள் ஒன்றுக்கு சராசரியாக ரூ.300/— வீதம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. ஒரு ஆண்டுக்கு ரூ.109500/— மட்டுமே வசூல் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி 4 பணியாளர்களுக்கு வழஙகப்படும் மாத ஊதியம் ரூ.115120/—, ஆண்டு ஒன்றுக்கு ரூ.1381440/— வழஙகப்பட்டு வருகிறது. மேலும் இரசீது புத்தகஙகள் அச்சடித்தல் மற்றும் பணியாளர்களின் ஊதியம் ஆகியவை துறை ரீதியாக வசூல் செய்த தொகையை காட்டிலும் கூடுதலாக உள்ளதால் நகராட்சிக்கு பெரும் வருவாய் இழப்பு ஏற்பட்டு வருகிறது.

மேலும் மேற்படி இரு சக்கர வாகன காப்பகத்திற்கு அரசால் நிர்ணயம் செய்த தொகை ரூ.2,50,000/— ஆகும். மேற்படி தொகையை காட்டிலும் அதிகமாக திரு.இன்பசேகரன் என்பவர் ரூ.303000/—க்கு ஒப்பந்தபுள்ளி வழஙகியுள்ளார். எனவே நிர்வாக நலன் கருதியும், நகராட்சியின் நிதி நிலையை கருத்தில் கொண்டும், பலமுறை ஏலம் கோரப்பட்டும் எவரும் ஏலம் கோர முன் வராத காரணத்தினாலும் திரு.இன்பசேகரன் என்பவர் கோரியுள்ள ஒப்பந்தபுள்ளி தொகை ரூ.303000/—க்கு குத்தகை உரிமம் வழஙக மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவக குறிப்பு:**

நிர்வாக நலன் கருதியும், நகராட்சியின் நிதி இழப்பை தவிர்க்கும் பொருட்டும் திரு.இன்பசேகரன் என்பவர் வழஙகியுள்ள ஒப்பந்தபுள்ளி தொகை (ஆண்டொன்றுக்கு) ரூ.303000/— க்கு குத்தகை உரிமம் வழஙக மன்றம் அனுமதி வழஙகலாம்.

ந.க எண் 5366/2017/அ1

**தீர்மானம் :**

அலுவலகக்குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.751**

**பொருள் 35 :** விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள பகுதியில் புதியதாக சாலைகள் அமைக்கும் பணிக்கு ஆகும் மதிப்பீடு தொகை ரூ.500.00 இலட்சத்தினை தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டுத் திட்டம் (TURIP) 2019 — 20 ன் கீழ் முழுமான்யநிதி பெறுவதற்கான திட்டபிரேரணை உரிய நிதி உதவி கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்கள் மூலம் சமர்பிக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**திட்டவிபரம்**

| வ. எண் | வார்டு எண் | பணியின் பெயர் | நீளம் (மீட்டர்) | அகலம் (மீட்டர்) | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|---|---|
| 1. | 4, 9, | நெசவாளர் காலனி 1வது தெரு, நெசவாளர் காலனி தொடக்கப்பள்ளி ரோடு, நெசவாளர் காலனி மேல்நிலைப்பள்ளி ரோடு (வெஙகடேஸ்வரா நகர்), தேவாடெக்ஸ், தேவாடெக்ஸ் காலனி ஆகிய பகுதிகளில் தார் சாலை அமைக்கும் பணி | 1220 | 5.00 | 100.00 |
| 2. | 16, 28 | எஸ்.பி.கே. கல்லூரி சாலை ரோடு, நாகலிங்க நகர் ஆகிய பகுதிகளில் தார் சாலை அமைக்கும் பணி | 1670 | 5.00 | 100.00 |
| 3. | 12, 8, 28 | என்.எம்.வி.சுப்பன் தெரு, உஜ்ஜி தெரு, மயிலாடும் தெரு, மலையரசன் கோவில் மெயின் தெரு, SR தெரு ஆகிய தெருக்களில் மழைநீர் வடிகாலுடன் கூடிய பேவர் பிளாக் தளம் அமைக்கும் பணி | 570 | 4.00 | 100.00 |
| 4. | 1, 9 | சாமி நாயக்கர் தெரு, பாம்பலம்மன் கோவில் வடக்கு தெரு, பாம்பலம்மன் கோவில் தெரு, ரஙகப்பன் தெரு, ஜோதிபுரம் தெரு, திருவள்ளுவர் காலனி தெரு ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகாலுடன் கூடிய பேவர் பிளாக் தளம் அமைக்கும் பணி | 1200 | 4.00 | 100.00 |
| 5. | 4, 5, 6, 20 | அன்பு நகர் 7வது, 9 வது தெரு, சண்முகநாதபுரம் 5வது, 6வது தெரு, முஸ்லீம் வடக்கு தெரு (நல்லூார் முஸ்லீம் பள்ளிவாசல்), மலையரசன் மூப்பனார் தெரு, மகாலிங்க மூப்பனார் தெரு ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகாலுடன் கூடிய பேவர் பிளாக் தளம் அமைக்கும் பணி | 960 | 6.50 | 100.00 |
| | | **மொத்தம்** | | | **500.00** |

**அலுவலககுறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2420/2018/இ1

**தீர்மானம் :**

அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.752**

**பொருள் 36 :** அருப்புக்கோட்டை நகராட்சியில் மாநில பேரிடர் மேலாண்மை நிதி SDRF 2019 – 20 ன் கீழ் G.O.(Ms) No.125 Revenue and Disaster Management Department Disaster Management wing, D.M.III(1) section Dt.2.05.2019ல் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து ஆழ்துளை கிணறு புனரமைக்கும் பணிக்கு (Redrilling of borewell) தேர்வு செய்யப்பட்ட இடஙகளில் வீடுகளின் மின் இணைப்பு வயர்கள் செல்வதால், போர்வெல் அமைப்பதற்கு இடையூறாக உள்ளது ஏற்கனவே தேர்வு செய்யப்பட்ட இடஙகளுக்கு பதிலாக கீழ்கண்ட படி மாற்றுத்தெருக்கல் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண். | ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட இடங்கள் | மாற்றாக தற்போது தேர்வு செய்யப்பட்ட இடங்கள் |
|---|---|---|
| 1. | காட்டுபாவா வடக்கு தெரு | நெசவாளர் காலனி 9வது தெரு |
| 2. | அம்பலம் சுப்பன் தெரு | மேலரத வீதி (கள்ளர் தெரு) |
| 3. | வர்த்தக சஙகம் தெரு | வடக்கு ரத வீதி |
| 4. | நத்தலிஙகம் தெரு | டெலிபோன் ரோடு (அம்பிகை வித்யாலயா பள்ளி அருகில்) |
| 5. | மஙகளம்மாள் ரைஸ்மில் தெரு | டெலிபோன் ரோடு (சிஙகாரதோப்பு) |
| 6. | பட்டாபிராமர்கோவில் தெரு | மேலரதவீதி (சௌடாம்பிகா கான்வெண்ட் முன்புறம்) |
| 7. | வாழவந்தாள் தெரு | தெற்கு ரதவீதி |
| 8. | அரசமரத்து தெரு | எம்.டிஆர்.நகர் கிழக்கு |

மேற்கண்ட விபரப்படி தற்போது மாற்றாக தேர்வு செய்யப்பட்ட இடஙகளில் போர்வெல் அமைப்பதற்கு ஏற்கனவே ஒப்புக்கொள்ளப்பட்ட ஒப்பந்ததாரரர்களால் அவர்கள் வழஙகிய அதே விலை விகிதத்திலேயே பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண். 3752/2019/இ1

**தீர்மானம் :**

அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.753**

**பொருள் 37 :** இந்நகராட்சிக்கு சொந்தமான பொறியியல் பிரிவு ஸ்கார்ப்பியோ வாகன எண் : TN 67 AJ 2135ல் பராமரிப்பு பணிகளை மகேந்திரா அஙகீகாரம் பெற்ற நிறுவனமான டேரிக் மகேந்திரா மோட்டார்ஸ் (Derik Mahindra PVT LTD), திருநெல்வேலி நிறுவனத்தாரின் மூலம் மேற்கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.15000/—யை நகராட்சி பொது நிதியின் கீழ்மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண். 5080/2019/இ2

**தீர்மானம் :**

அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.754**

**பொருள் 38 :** அருப்புக்கோட்டை நரகாட்சி எல்லைக்குட்பட்ட வார்டு F, பிளாக் 9 நகரளவு எண் 1,2,3,4,5,6,7,8 பகுதி (சர்வே எண்கள் 287/2(ப), 282/2,3,4,5,6,7,8(ப), 10 பகுதி)ல் 4.68 ஏக்கர் (18939.28சமீ) பரப்பளவில் அமைந்துள்ள அனுமதியற்ற மனைப்பிரிவை அரசாணை எண்கள் 78,172 H&UD நாள் 04.05.2017 மற்றும் 13.10.2017ன்படி வரன்முறைப்படுத்த கோரி திருமதி.L.பிரியா என்பவர் விண்ணப்பித்ததன் பேரில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மதுரை அவர்களால் ம.வ(மு)ந.ஊ.து.இ(மம) எண் 861/2018 நாள் 17.12.2018ல் கொள்கை அளவிலான ஒப்புதல் வழஙகியுள்ளார்.

மேற்படி ஒப்புதல் பெறப்பட்ட அஙகீகரிக்கப்படாத மனைப்பிரிவில் உள்ள சாலை மற்றும் பூஙகாவினை ஆவண எண் 3096/2019 நாள் 27.06.2019ல் மனுதாரரால் நகராட்சிக்கு தானமாக வழஙகப்பட்டுள்ளது. மேற்படி சாலை மற்றும் பூஙகாவினை நகராட்சி ஏற்று நகராட்சி அசையாச் சொத்து பதிவேட்டில் பதிவு செய்யலாம்.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண். 11561/2018/எப்1

**தீர்மானம் :**

அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.755**

**பொருள் 39 :** அருப்புக்கோட்டை நகராட்சி 14.96 ச.கி.மீ பரப்பளவு கொண்டு 36 வார்டுகள் உள்ளடக்கியது. 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கின்படி 87722 ஆகும். நகராட்சிக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் (தாமிரபரணி கூட்டுக்குடிநீர் திட்டம், வல்லநாடு, CWSS) மூலம் நாள் ஒன்றுக்கு 49.50 லட்சம் அனுமதிக்கப்பட்ட நிலையில் குடிநீர் கிடைக்கப்பெறுகிறது. வளர்ந்துவரும் நகரின் மக்கள் தொகைக்கேற்ப குடிநீர் வழங்க வேண்டியுள்ளதால் தாமிரபரணி ஆற்றினை நீர் ஆதாரமாகக் கொண்டு செயல்படுத்தப்படவுள்ள புதிய கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ் அருப்புக்கோட்டை – சாத்தூர் மற்றும் விருதுநகர் நகராட்சிக்குக் கென தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் குடிநீர் திட்டம் அமைக்க பார்வை 1ல் கண்டுள்ள மாண்பு மிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்களின் 2017–18 மானியக் கோரிக்கையில் சட்ட மன்ற சிறப்பு அறிவிப்பு (எண் 36) செய்யப்பட்டுள்ளது. அதன்படி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மூன்று நகராட்சிகளுக்கும் சேர்த்து கூட்டுக்குடிநீர் திட்டம் புதியதாக அமைக்க மதிப்பீடு தொகையாக ரூ.501.60 கோடி ஆகும். அதில் **அருப்புக்கோட்டை நகராட்சிக்கு மட்டும் திட்ட மதிப்பீடு தொகையாக ரூ.254.59 கோடி ஆகும்.**

நகராட்சி நிதிநிலைமையினை கருத்தில் கொண்டு மேற்கண்ட நகராட்சிப் பங்குத்தொகையான ரூ.254.59 கோடியினை அரசு முழுமான்யமாக அனுமதித்து உரிய நிர்வாக அனுமதி வழங்கிட வேண்டுமாறு அரசு முதன்மை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை, சென்னை அவர்களின் அனுமதி பெற மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம் ந.க.எண்.7476/2017/இ1

**<u>தீர்மானம் :</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.756</u>**

**பொருள் 40 :** அருப்புக்கோட்டை நகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் வழங்கல் பிரிவில் கீழ்க்கண்ட 6 தற்காலிக பணியிடங்களுக்கு 01.10.2012 முதல் 30.09.2013 வரை நீட்டித்து வைத்துக்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.50875/எப்3/2011, நாள்.22.01.2013ன் படி கீழ்க்கண்ட பணியிடங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் இந்நகர்மன்ற தீர்மான எண்.1315, நாள்.29.07.2013ன்படி 01.10.2013 முதல் 30.09.2014 வரையிலும், இந்நகர்மன்றத் தீர்மான எண்.1675, நாள்.08.08.2014ன் படி 01.10.2014 முதல் 30.09.2015 வரையிலும், இந்நகர்மன்ற தீர்மான எண் 2163 நாள்31.07.2015ன்படி 01.10.2015 முதல் 30.09.2016 வரையிலும், இந்நகர்மன்ற தீர்மான எண் 93 நாள் 07.04.2017ன்படி 01.10.2016 முதல் 30.09.2017 வரையிலும், இந்நகர்மன்ற தீர்மான எண் 195 நாள் 07.08.2017ன் படி 01.10.2017 முதல் 30.09.2018 மற்றும் இந்நகர்மன்ற தீர்மான எண் 478 நாள் 03.08.2018ன் படி 01.10.2018 முதல் 30.09.2019 வரையிலும் மன்றத்தில் காலநீட்டிப்பு செய்யவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

1. நகராட்சி பொறியாளர் தரம் – II – 1 பணியிடம்
2. மின்கண்காணிப்பாளர் தரம் – I – 1 பணியிடம்
3. மின்பணியாளர் தரம் – II – 1 பணியிடம்
4. பைப்லைன் பிட்டர் தரம் – II – 1 பணியிடம்
5. மீட்டர் ரீடர் – 1 பணியிடம்
6. ஜீப் ஓட்டுநர் – 1 பணியிடம்

இந்நகராட்சியிலிருந்து இருந்து சுமார் 45 கி.மீ. தொலைவில் உள்ள திருப்புவனம் வைகையாற்றில் இருந்தும், சுமார் 120 கி.மீ. தொலைவில் உள்ள வல்லநாடு தாமிரபரணி கடலோரக் கூட்டுக்குடிநீர் திட்டத்தின் மூலம் குடிநீர் பம்பிங செய்யப்பட்டு, நகரில் ஏற்கனவே உள்ள 3 குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுடன் கூடுதலாக 4 இடஙகளில் கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் பகிர்மானக்குழாய்கள் பதிக்கப்பட்டும் குடிநீர் விநியோகம் நடைபெற்றுவருகிறது. இந்நிலையில் நாளுக்கு நாள் பெருகிவரும் மக்கள் தொகையை கருத்தில் கொண்டும், பொறியியல் மற்றும் குடிநீர் விநியோக பணிகளை செய்துமுடிக்க மேற்கண்ட பணியிடஙகள் அத்தியாவசியமாக உள்ளதால் அவற்றை 01.10.2019 முதல் 30.09.2020 வரை தொடர்ந்து மேலும் ஓராண்டுக்கு நீட்டித்து வைத்துக்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.2626/2011/இ1

**<u>தீர்மானம் :</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.757</u>**

**பொருள் 41 :** அருப்புக்கோட்டை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவின் பயன்பாட்டிலிருந்துவரும் வாகன எண் TN 67 AH 8606 வாகனத்திற்கு, வாகனத்திலுள்ள பழுதுபணிகள் பார்த்து தகுதிச்சான்று புதுப்பித்துத்தர திரு.கொப்பையன், ஓட்டுநர் மற்றும் சுகாதார ஆய்வாளர் 05.04.2019ம் தேதிய அறிக்கையில் தெரிவித்துள்ளனர். அதன்படி அதற்கு ஆகும் உத்தேச செலவுத்தொகை ரூ.50,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.2459/2019/எச்2

**<u>தீர்மானம் :</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.758</u>**

தனி அலுவலர்
அருப்புக்கோட்டை நகராட்சி